DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.136/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பாரதிராஜா | கிராமம் : | |
| தந்தை பெயர் : | சங்கப்பிள்ளை | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் மேட்டுத்திருக்காம்புலியுரில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 முதல் 4 எதிரிகளைத் பார்த்ததில்லை. அ.சா.1 விக்னேஷ்வரனைத் தெரியும், சாட்சிகள் சதிஷ்குமார், ஜீவா ஆகியோர்களைத் தெரியாது. வழக்குப்பற்றி எனக்குத் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள் தெரியாது என்று சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**கடந்த** 13.09.2023ம் தேதி 21.00 மணியளவில் திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகே 1 முதல் 4 எதிரிகள் சதிஷ்குமார்,. ஜீவா, பாரதி, மற்றும் அ.சா.1 ஐ வழிமறித்தார்கள் என்றால் சரியல்ல. 3ம் எதிரி சபரிநாதன். 4ம் எதிரி திவாகர் ஆகீயோர்கள் தேவடியா பயலே என்று திட்டினார்கள் என்ாறல் சரியல்ல. கவிதாஸ் கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ஐ வலது கெண்டைக்கால் இடதுகால் முட்டி ஆகியவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்ாறல் சரியல்ல. இதைத்தடுக்க வந்த சதிஷ்குமாரை இடது உள்ளங்கையில் வெட்டி

ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்ாறல் சரியல்ல. சாட்சி ஜீவாவை வலதுகை மணிக்கட்டு, வலது முழங்கை, வலது கால் முட்டி, இடது கால் முட்டி ஆகீயவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அங்கிருந்தவர்கள் ஒடிவரவே நான்கு எதிரிகளும இன்னிக்கு தப்பித்து விட்டிர்கள் என்னைக்கிருந்தாலும் சாட்சிகளைப்பார்த்து கொல்லாமல் விடமாட்டோபம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை நேரில் பார்த்து போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்ாறல் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/–ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.